**அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - றொம்மன் வளாகம்**
**33 ஆவது ஆண்டு கல்வியியற் போட்டிகள் - 2025**

**6 → 12ம் வகுப்பு வரையான மாணவர்களின் போட்டி விபரங்கள்**
**போட்டிக்கான விண்ணப்ப முடிவுநாள்: 30.01.2025**

## ஓவியப்போட்டி

போட்டியில் பங்குபற்ற விண்ணப்பம் அனுப்பியோர் போட்டி நடைபெறும் நாளில் சமுகம் தரவேண்டும்.

- 6ம் வகுப்பு மாணவர்கள் போட்டி நடைபெறும் மண்டபத்தில் வழங்கப்படும் காட்சியை அல்லது படத்தைப் பார்த்து, வரைந்து வர்ணம் தீட்டுதல்.
- 7 - 8 வகுப்பு மாணவர்கள் வழங்கப்படும் தலைப்பிற்கு படம் வரைந்து வர்ணம் தீட்டுதல்.
- 9 - 12ம் வகுப்பு மாணவர்கள் போட்டி நடைபெறும் மண்டபத்தில் வழங்கப்படும் பொருளை அல்லது படத்தைப் பார்த்து வரைந்து, வர்ணம் தீட்டுதல்.
- ஓவியம் வரைவதற்கான தாள் பாடசாலையில் வழங்கப்படும். ஓவியம் வரைவதற்கான ஏனைய பொருட்கள் மாணவர்கள் கொண்டு வருதல் வேண்டும்.

## கட்டுரைப்போட்டி

- **இவ்வாண்டு மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டிக்கு அணியம் செய்வதற்கு (தயார்படுத்துவதற்கு) 4 தலைப்புகள் முன்னரே வழங்கப்படும். மாணவர்கள் இத் தலைப்புகளில் கட்டுரைகளை எழுதிப் பழகுதல் வேண்டும்.**
- போட்டி நடைபெறும் நாளன்று வழங்கப்பட்ட 4 தலைப்புகளில் ஒன்றை கல்வியியற்போட்டிக் குழுவினர் தெரிவு செய்து, மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டியில் கட்டுரை எழுதுவதற்கு வழங்கப்படும்.
- தயார்ப்படுத்திய குறிப்புகள், கட்டுரைகள் எவையும் போட்டி நடைபெறும் மண்டபத்துக்குள் கொண்டு வருவதற்கு அனுமதியில்லை.

- அணியம் செய்வதற்கான தலைப்புகள் வகுப்பு வட்சப் (whatsapp) குழுமங்களில் போடப்படும்.
- கட்டுரைப் போட்டியில் கூடுதலான மாணவர்கள் பங்குபெற ஊக்குவிக்கும் நோக்குடன் இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## திருக்குறள் மனனப்போட்டி:

போட்டியில் பங்குபற்ற விண்ணப்பம் அனுப்பியோர் போட்டி நடைபெறும் நாளில் சமுகம் தரவேண்டும்.

## நிழற்படம் பார்த்துப் பேசுதல் (இயல்பாக அமைதல்)

பங்குபெறும் பிரிவுகள்:

| ஆண்டு | | வகுப்பு |
|---|---|---|
| 2007 | - | ஆண்டு 12 |
| 2008 | - | ஆண்டு 11 |
| 2009 | - | ஆண்டு 10 |
| 2010 | - | ஆண்டு 9 |
| 2011 | - | ஆண்டு 8 |
| 2012 | - | ஆண்டு 7 |
| 2013 | - | ஆண்டு 6 |

## போட்டி விதிமுறை:

- **இவ்வாண்டு மாணவர்களுக்கு நிழற்படம் பார்த்துப் பேசுதற் போட்டிக்கு அணியம் செய்வதற்கு (தயார்படுத்துவதற்கு) 4 தலைப்புகள் முன்னரே வழங்கப்படும். மாணவர்கள் இத் தலைப்புகளில் பேசுவதற்கு அணியம் செய்தல் வேண்டும்.**
- போட்டி நடைபெறும் நாளன்று வழங்கப்பட்ட 4 தலைப்புகளில் **ஒன்றை** கல்வியியற்போட்டிக் குழுவினர் தெரிவு செய்து, பேசுவதற்கு மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- தயார்ப்படுத்திய குறிப்புகள், எவையும் போட்டி நடைபெறும் மண்டபத்துக்குள் கொண்டு வருவதற்கு அனுமதியில்லை.

- மாணவர்கள் நிழற்படக்காட்சியைப் பற்றி 60 நிமிடங்களுக்குள் பேசுவதற்குத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
- காட்சியின் கருப்பொருளைப் பற்றித் தங்கள் கற்பனையில் மூன்று நிமிடங்களுக்குள் பேசுதல் வேண்டும். (பேசும்முறையானது இயல்பாக அமைதல் வேண்டும்.

- போட்டியில் பங்குபற்ற விண்ணப்பம் அனுப்பியோர் போட்டி நடைபெறும் நாளில் சமுகமளிக்கவேண்டும்.

தயார்படுத்தலை வகுப்பறைகளில் (45 மணித்துளிகள்) மேற்கொள்ளுவர். பேசிப்பழக விரும்பின், 15 மணித்துளிகள் பிறிதோர் அறைக்கு ஒவ்வொருவராக மாற்றப்படுவர். பின்பு **மூன்று மணித்துளிகள்** மேடையிற் பேசுவர்.

ஒவ்வொரு பிரிவு மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான நிழற்படம் வழங்கப்படும். மாணவர்களின் பேச்சின் போது நடுவர்களினால் அவர்களுடைய **மொழியாளுமை, கற்பனைவளம், உச்சரிப்பு , தொனி, பேசும்முறை** ஆகியவை கவனிக்கப்படும். **பேசும்முறையானது இயல்பாக அமைதல் வேண்டும்.**

**எடுத்துக்காட்டு:**

இப்படம் என்ன காட்சியினைக்காட்டுகிறது அல்லது என்ன விடயத்தை நினைவுபடுத்துகிறது.

இக்காட்சி தைப்பொங்கல் திருநாளைக் காட்டுகிறது. தைப்பொங்கல் .........

**குறிப்பு** :பார்வையாளர்களாக மண்டபத்தில் பெற்றோர், மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

| | | |
|---|---|---|
| கட்டுரைப்போட்டி **(6 - 10)** | 01.02.2025 | 13:00 - 14:30 |
| கட்டுரைப்போட்டி **(11,12)** | 02.02.2025 | 17:00-18:30 |
| ஓவியப்போட்டி **(6 - 10)** | 08.02.2025 | 13:00 - 14:30 |
| ஓவியப்போட்டி (11,12) | 09.02.2025 | 17:00-18:30 |
| அரையிறுதிப் பேச்சுப்போட்டி (1-7) | 15.02.2025 | 12:30 |
| திருக்குறள் மனனப் போட்டி (4-10ம் வகுப்பு) | 16.02.2025 | 12.00 |
| திருக்குறள் மனனப் போட்டி (11,12ம் வகுப்பு) | 16.02.2025 | 14.30 |
| நிழற்படம் பார்த்துப் பேசுதல் (இயல்பாகப் பேசுதல்)**(6 - 12)** | 01.03.2025 | 13:00 |